# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2054 ● ஏப்ரல் 29 2023 Weekly E-paper ● April 29, 2023


## நிதி அமைச்சர் பி.டி.ஆர் பேசியது உண்மையா?

சுப.வீரபாண்டியன்



### தேர்தல் பயத்தில் அமித்ஷா! மதவாதப் பேச்சு!

சிற்பி செல்வராசு

### புரட்சிக் கவிஞர்! பேரவை நாள்!!

தலையங்கம்

### மதங்கள் மறுக்கும் மனிதம் - புர்கா திரைப்பட விமர்சனம்

வெற்றிச்செல்வன்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2054 ● ஏப்ரல் 29 2023 Weekly E-paper ● April 29, 2023


# நிதி அமைச்சர் பி.டி.ஆர் பேசியது உண்மையா?

**சுப.வீரபாண்டியன்**

கடந்த ஒரு வாரமாக, தமிழ்நாடு, நிதி அமைச்சர் பி. டி.ஆர் பழனிவேல் தியாகராசன், தனிப்பட்ட முறையில் ஒருவரிடம் பேசும் போது முதலமைச்சர் பற்றியும், அவர் குடும்பத்தினர் பற்றியும், ஊழல் குற்றச்சாட்டுகளை உறுதிப்படுத்திப் பேசியிருக்கிறார் என்பதாகச் சில காணொளிகள் வெளியிடப்பட்டு, அது குறித்துப் பல்வேறு விவாதங்களும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன!



அவை பொய்யாகத் திட்டமிட்டுத் தயாரிக்கப்பட்டுள்ளன என்றும், ஆளும் கட்சிக்குள் ஒரு சிக்கலை ஏற்படுத்துவதுதான் அதன் நோக்கம் என்றும் அடுத்தடுத்த காணொளிகள் வெளிவந்துள்ளன. செயற்கை அறிவு (artificial intelligence) என்பதன் மூலம் இப்படிப் பொய்யை உண்மை போல் காட்ட முடியும் என்பதை நிதி அமைச்சரும் விளக்கியிருக்கிறார்.

தமிழ்நாட்டின் நிதி அமைச்சர் பி டி ஆர் அவர்கள் ஒரு சிறந்த அறிவாளி என்பதும், அமைச்சரவைக்குப் பெரும் துணையாக இருப்பவர் என்பதும் உலகறிந்த செய்தி! எனவே அவர் மீது அவதூறுகள் பரப்புவதன் மூலம் அமைச்சரவைக்கும், ஆளும் கட்சிக்கும் பெரும் சிக்கலை ஏற்படுத்திவிட முடியுமா என்று "சில்லறை வியாபாரிகள்" சிலர் எதிர்பார்த்திருக்கின்றனர். அந்த முயற்சி பயனற்றுப் போய்விட்டது!

## ஐயோ பாவம்!



ஊழலை எதிர்ப்பதுதான் பா.ஜ.கவின் முதல் வேலை

- பெங்களுருவில் பிரதமர் மோடி



அ.தி.மு.க ~ பா.ஜ.க கூட்டணியில் எந்த விரிசலும் இல்லை, அது தொடர்கிறது

- தமிழ்நாட்டில் எடப்பாடி

இது ஒரு புறம் இருக்க, நமக்குக் கவலை தருகிற இன்னொரு செய்தி இதற்குள் ஒளிந்திருப்பதை அனைவரும் கவனத்தில் கொள்ள வேண்டும். கருத்தியல், சித்தாந்தம் இவைகளை விட்டு விலகி, ஒட்டுக் கேட்பது, அந்தரங்கத்தைப் படம் பிடிப்பது, அவதூறுகளை அள்ளி வீசுவது என்று அரசியல் சரியத் தொடங்கி இருக்கிறது என்பதுதான் பெரும் கவலைக்குரிய செய்தி!

எதிர்க்கட்சியின் மீதுதான் என்று இல்லை, தங்கள் கட்சிக்குள்ளும் பாஜக இந்த ஆயுதத்தைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறது! அதற்கான மிகப்பெரிய எடுத்துக்காட்டுதான் கே.டி .ராகவன். அவர் என்ன செய்தார், அப்படிச் செய்தது சரியா என்பன போன்ற வினாக்கள் ஒரு புறம் இருக்க, அதில் என்ன அரசியல் இருக்கிறது என்ற கேள்வியே முதன்மையானது! கே. டி. ராகவன் தவறாக நடந்து கொண்டிருந்தால், பாதிக்கப்பட்ட பெண்கள் காவல் நிலையம் சென்று இருக்க வேண்டும். அது ஒரு கிரிமினல் வழக்கே தவிர அரசியல் விவாதம் அன்று!

என் போன்றவர்களின் இளமைக் காலத்தில், அரசியல் அரங்குகளில், சித்தாந்த விவாதங்கள் தான் முதன்மையாக இருந்தன. திராவிட- தமிழ்த் தேசியமா, இந்திய தேசியமா, சர்வதேசியமா போன்ற வினாக்கள் எழுப்பப்பட்டு, அவை தொடர்பான விளக்கங்கள் பொது மேடைகளில் வழங்கப்பட்ட காலம் அது!

இப்போதும் நிதி அமைச்சர் பேசியதில், என்னென்ன தகவல் பிழைகள் இருக்கின்றன, இந்த சித்தாந்தம் தவறானது என்பன போன்ற விவாதங்கள் எழுப்பப்பட்டு .இருக்குமானால், விடை சொல்ல வேண்டிய கடமை அமைச்சருக்கும், அரசுக்கும் கட்டாயம் இருந்திருக்கும். ஆனால் தனிமனித அவதூறுகளே அரசியலாக இன்று மாற்றப்படுகின்றன!

இதுபோன்று மலிவான, அநாகரிகமான, அருவெறுக்கத்தக்க அவதூறுகளை முன்னெடுக்கும் சிலர், அரசியல் விமர்சகர்கள் என்னும் பெயரில் வலம் வருவது நாட்டுக்கு அவமானம். இதுபோன்ற "துப்பறியும் புலிகளால்" இந்த மண்ணுக்கும், மக்களுக்கும் ஒரு நன்மையும் ஏற்படப் போவதில்லை!

இது போன்ற அவதூறுகளில் குளிர்காய்வதை விட்டு விட்டு, அரசியல் விமர்சனங்களை முன்னெடுப்பதும், இதுபோன்ற அநாகரிகப் போக்குகளைப் புறந்தள்ளுவதும் இன்றையத் தேவை என்பதை மக்களிடம் உணர்த்த வேண்டிய பொறுப்பு எல்லா கட்சியினருக்கும் இருக்கிறது!

●

# தேர்தல் பயத்தில் அமித்ஷா! மதவாதப் பேச்சு!

**சிற்பி செல்வராசு**

கர்நாடகத்தில் நடைபெறவிருக்கின்ற சட்டமன்றத் தேர்தல் பரப்புரையின் போது பாரதிய ஜனதா கட்சியின் அம்மாநிலத் தலைவர்களில் ஒருவரான ஈஸ்வரப்பா சிமோகா பகுதியில் நடைபெற்ற கூட்டத்தில், கர்நாடக சட்டமன்றத் தேர்தலில் இஸ்லாமிய சமுதாயத்தை சேர்ந்தவர்கள் பாரதிய ஜனதா கட்சிக்கு வாக்களிக்க வேண்டாம் என்றும், உங்கள் வாக்குகள் எங்களுக்கு தேவையில்லை என்றும் ஒரு மத வெறுப்புப் பேச்சைப் பேசிஇருக்கிறார். இது இந்தியாவினுடைய அரசியலமைப்புச் சட்டத்தை மீறியதாக இருக்கிறது.

அதே கர்நாடகத்தில் இந்திய ஒன்றியத்தின் உள்துறை அமைச்சராக இருக்கக்கூடிய அமித்ஷா, கர்நாடகத்தில் காங்கிரஸ் கட்சி ஆட்சி அமைத்தால் கலவரம் வெடிக்கும் என்று பேசியிருக்கிறார். ஒன்றியத்தின் உள்துறை அமைச்சர் இப்படி மதவெறிப் பேச்சைப் பேசலாமா? இது அரசியல் சாசனத்திற்கும், நாட்டின் ஒற்றுமைக்கும் எதிரான பேச்சு.

அதைத் தொடர்ந்து பாரதிய ஜனதா கட்சிக்கு வாக்களிக்காத ஒவ்வொருவரும் தேசத்துரோகிகள் என்றும் பேசியிருக்கிறார் அமித்ஷா. இந்தப் பேச்சு மதவெறியின் உச்சமாக இருக்கிறது. தந்தை பெரியார் சொன்னார், சர்வாதிகாரியின் கடைசி புகலிடம் தேச பக்தி என்று . அதாவது சர்வதிகாரர்களின் கருத்துக்கு எதிராக, மாறாக யாராவது பேசினாலோ, எழுதினாலோ அவர்கள் தேசத் துரோகிகள் என்றும், தேச அபிமானம் இல்லாதவர்கள் என்பதும் பெரியாரின் கூரிய பார்வை.

ஜனநாயகத்தில் எதிர்க்கட்சிகள் என்பது ஆளும் கட்சியினுடைய லகானை கையிலே வைத்திருப்பது போன்றதாகும். “இடிப்பாரை இல்லாத ஏமாரா மன்னன் கெடுப்பார் இலானும் கெடும்” என்றார் பெரும் புலவர் திருவள்ளுவர்.

கர்நாடகத்தில் தோல்வி பயம் சங்கிகளைப் பற்றிக் கொண்டது. கடந்த 10 ஆண்டுகளாக கர்நாடகத்தில் இஸ்லாமிய மக்களுக்கு நான்கு சதவிகித இட ஒதுக்கீடு வழங்கப்பட்டிருக்கிறது. அந்த இட ஒதுக்கீட்டினைத் தரக்கூடாது என்று பேசி கர்நாடகத்தின் ஆளும் பா.ஜ.க முதலமைச்சர் பசவராஜ் பொம்மை அரசு, இட ஒதுக்கீட்டைத் தடை செய்து உத்தரவு போட்டது. அந்த உத்தரவுக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டு, அந்த வழக்கில் நான்கு நாட்களுக்கு முன்னாள் ஒரு தற்காலிகத் தீர்வு வந்திருக்கிறது. அதாவது கர்நாடக சட்டமன்றத் தேர்தல்கள் நிறைவு பெற்று புதிய அரசு அமையும் வரை, குறிப்பாக மே மாதம் முதல் வாரம் வரை இஸ்லாமியர்களுக்கான இட ஒதுக்கீட்டில் எந்த விதமான மாற்றமும் செய்யக்கூடாது என்று இந்த அரசினுடைய தலையில் குட்டு வைத்திருக்கிறது.

இந்திய ஒன்றியம் 2024 ஆம் ஆண்டு நடைபெறுகின்ற நாடாளுமன்றத் தேர்தலை எதிர் நோக்கி நகர்கிறது. நாடாளுமன்றத் தேர்தலில் மதவெறி இந்துத்துவத்தின் கொடுங்கரத்தில் திரும்பவும் இந்த நாடு சிக்கிவிடக் கூடாது.

நாடும், சமூக நீதியும், மனித நேயமும் காக்கப்பட வேண்டும். பாரதிய ஜனதா கட்சியை 2024 தேர்தலில் வீழ்த்த அனைத்து மாநில எதிர்கட்சிகள் ஒன்று சேர வேண்டும். இதற்கான முயற்சிகளும் தென்படுகிறது.

மதவாதப் பிரிவினையாளர்களின் கைகளில் நாடு போகக் கூடாது, பாசிசத்தை வீழ்த்துவது அனைவரின் கடமை. ●

# மோடி கூட்டாட்சி தத்துவம் ஒரு ஏமாற்று வேலை!

**சாரதாதேவி**

கேரளாவில் 25.04.2023 அன்று, வந்தே பாரத், கொச்சி வாட்டர் மெட்ரோ போன்ற ரூபாய் 3200 கோடி முதலீட்டுத் திட்டங்களைத் தொடங்கி வைத்திருக்கிறார் ஒன்றியப் பிரதமர் மோடி! அப்போது, “ஒன்றிய அரசு கூட்டாட்சி முறையை வலியுறுத்துகிறது” என்ற முத்தை உதிர்த்திருக்கிறார் பிரதமர்! நம்மால் நம்பத்தான் முடியவில்லை!

கேரளா வளர்ந்தால் நாடே வளருமாம்! என்ன ஒரு மாநிலப் பற்று! கேரள மக்கள் படித்தவர்களாம்; உலக அரசியல் தெரிந்தவர்களாம். முதல் முறையாக அங்கு இருக்கும் பல்வேறு திருச்சபைகளைச் சேர்ந்த பாதிரியார்களை சந்தித்திருக்கிறார்!

அரசியல் ஆதாயம் கருதி, வரும் 2024 தேர்தலைக் கருத்தில் கொண்டு, பிரதமர் ஒவ்வொரு மாநிலத்திலும் செய்யும் வழக்கமான வித்தைகள் என்றாலும், 2014 முதல் “ஒரே இந்தியா”, “ஒரே அட்டை”, “ஒரே சட்டம்” “ ஒரே கல்வி” என மாநில அரசுகளைச் சட்டை செய்யாமல், அரசியலமைப்பின் அதிகார எல்லைகளைக் கூட கருத்தில் கொள்ளாமல், எல்லா அதிகாரங்களையும் ஒன்றியத்தில் குவித்துக் கொண்டு வந்த பிரதமர், கூட்டாட்சி எனும் சொல்லை முதன் முதலில் உதிர்த்திருக்கிறார்.

“நீட்”, “நெக்ஸ்ட்” எனும் பொதுத் தேர்வுகளை நம் மாணவர்கள் மீது திணித்து, அவர்களின் மருத்துவக் கனவுகளைத் தவிடுபொடியாக்கி, முப்பதுக்கும் மேற்பட்ட மாணவர்களின் இன்னுயிர்களை எடுத்தபோது கூட்டாட்சி சிந்தனை எங்கே போனது? நீட்டிற்கு விலக்கு கோரி நாம் சட்டம் இயற்றிக் கொண்டே இருக்கிறோமே, ஒரு முறையாவது அதை ஒப்புக் கொண்டிருந்தால், நாம் அவர் கூறுவதை நம்பி இருப்போம்! புதிய கல்விக் கொள்கையை நாம் ஏற்க மாட்டோம் என அறிவித்த பின்னரும் அதைக் கொல்லைப்புறமாக வலியுறுத்துவது தான் கூட்டாட்சியா?

பா.ஜ.க. ஆளாத மாநிலங்களில், ஆளுநர்களை முதல்வரைப் போலவும், அவருக்கு எதிராகவும் செயல்பட அறிவுறுத்தி, மாநில நலன்களுக்கு எதிராக செயல்படுவதுதான் கூட்டாட்சியை வலியுறுத்தும் அழகா? மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத, அலங்காரப் பதவி வகிக்கும் ஆளுநர்கள் மக்கள் பிரதிநிதிகளோடு மோதிக் கொண்டிருப்பது கூட்டாட்சியின் அழகா?

தங்கள் கட்சி ஆளாத மாநிலங்களுக்கு சரக்கு மற்றும் சேவை வரிப் பகிர்வில் நிலுவை வைப்பது, குறைத்துக் கொடுப்பது, திட்டங்களைக் கிடப்பில் போடுவது என்று பாகுபாடு பார்ப்பது தான் கூட்டாட்சித் தத்துவத்தின் சாரமா?

தொடர்ச்சியாக மாநிலத்துக்குள் இயங்கும் ஒன்றிய அரசு அலுவலகங்கள், ஒன்றிய அரசின் நிதி உதவியில் இயங்கும் பள்ளிகள், பொதுத் துறை நிறுவனங்களில், மாநில மக்களின் மொழியையோ, இருப்பிடத்தையோ ஒரு தகுதியாக்காமலும், ஏனைய தில்லுமுல்லு விதிமுறைகளாலும் ஒரு தமிழர் கூட இடம்பெறாத வண்ணம் பணி நியமனங்கள் நடப்பதுதான் கூட்டாட்சியின் வலியுறுத்தலா? இந்தி பேசாத மாநிலங்களில், இரண்டாவது அலுவல் மொழியாக இந்தியைத் திணித்தும், இல்லாத சமஸ்கிருதத்தைக் கொண்டாடவும் வலியுறுத்துவது எவ்விதமான கூட்டாட்சி?

ஆயிரம் கேள்விகள் நம் நெஞ்சில் தைக்கின்றன. கூச்சமின்றி ஒவ்வொரு மாநிலத்திலும், அந்த மக்களுக்கேற்றாற் போலப் பேசிக் கவரும் பிரதமரே, முதல் முறையாக கூட்டாட்சி என வாய்மொழி அருளி இருக்கிறார், அடி பலமா? அல்லது பயம் வந்துவிட்டதா?

கூட்டாட்சிக்கான மாநில உரிமைகளை மக்கள் போராடிப் பெறுவார்கள்.

எனில் இந்தியா என்பது ஒரு தேசம் அன்று, பல்வேறு தேசியங்களின் தொகுப்பு, ஒன்றியம்.

அவரவருடைய மொழியை, நிலத்தை, சுற்றுச்சூழலை, மக்கள் நலனைப் பாதுகாப்பதில் இங்கு எந்த ஒன்றிய அரசும் அந்தந்த மண்ணின் மைந்தர்களை விஞ்சிவிட முடியாது. ●

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## புரட்சிக் கவிஞர்! பேரவை நாள்!!

‘பில்கணியம்’ என்ற வடநூலைத் தழுவி 1937 ஆம் ஆண்டு கவிஞர் பாரதிதாசனார் எழுதிய குறுங்காவியத்திற்கு அவர் ‘புரட்சிக்கவி’ என்று பெயர் வைத்தார்.

நாவலர் சோமசுந்தர பாரதியார் தலைமையில் 29-07-1946 இல் நடந்த பாராட்டு விழாவில் அறிஞர் அண்ணா கவிஞரைப் ‘புரட்சிக் கவி’ என்று அழைத்தார். ஐயா தந்தை பெரியார் அவர்கள் ‘புரட்சிக் கவிஞர்’ என்று சொன்னார், பாரதிதாசனாரை.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார், தந்தை பெரியார் வழியில் பகுத்தறிவு, சமத்துவம், சமூக நீதி, தமிழ்-தமிழரின் இனநல மேன்மையென திராவிட சித்தாந்தத்தில் பாடிய பாடல்கள் அவரைப் புரட்சிக் கவிஞர் என்று உலகுக்கு அடையாளம் காட்டிற்று.

3500 ஆண்டுகளாக மதத்திற்கு அடிமைப்பட்டுக் கிடந்த மக்களைத் தட்டி எழுப்பிய திராவிப் புரட்சிக் கவிஞர் நம் பாரதிதாசன் அவர்கள்.

திராவிட இயக்கத் தமிழர் பேரவை, ஐயா பெரியார், அறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் வழியில் சமூக நீதிக்கான இயக்கம்.

அதுபோல திராவிட இயக்கக் கவிஞர்களான பொன்னிவளவன், முடியரசன் போன்றோரையும் நினைவில் கொண்டிருக்கிறது.

இக்கவிஞர்களின் முன்னோடியாகத் திகழ்பவர் பாரதிதாசன் அவர்கள்.

புரட்சிக் கவிஞர் 29-04-1891ஆம் ஆண்டு பிறந்தார்.

21-04-1964ஆம் ஆண்டு மறைந்தார்.

புரட்சிக் கவிஞரை முதன்மைப் படுத்தும் விதமாக கவிஞர் பிறந்த நாளான ஏப்ரல் 29 ஆம் நாளைப் ‘பேரவை நாள்’ ஆக மேற்கொண்டு அவரின் சிறப்பையும், புகழையும் ஏந்தி வருகிறது, திராவிட இயக்கத் தமிழர் பேரவை, ஆண்டுதோறும்.

இந்த ஆண்டு பேரவை நாளான புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பிறந்த நாளில் “கருஞ்சட்டைத் தமிழர்” மின்னிதழின் இவ்வார இதழ் வெளிவருகிறது என்பது கூடுதல் மகிழ்வைத் தருகிறது.

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்
பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்
ஆசிரியர் குழு:
உதயகுமார்
வெற்றிச்செல்வன்
சாரதா தேவி
வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,
தொலைபேசி: 044-2472 6408

# சென்னை மாவட்டப் பயிலரங்கம்




திராவிட இயக்கத் தமிழர் பேரவை, சென்னை மாவட்டத்தின் சார்பாக மூன்றாம் தொடர் பயிலரங்கம், 23-04-2023 அன்று சென்னை தேனாம்பேட்டை அன்பகம் அரங்கில் நடைபெற்றது. மாவட்டத் தலைவர் கார்த்தி தலைமையில், பேரவைத் தலைமை நிலையச் செயலாளர் எட்வின் தொகுப்புரையில் நடைபெற்ற பயிலரங்கத்தின் தலைமை உரையைக் கருஞ்சட்டைப் பதிப்பகத்தின் இயக்குநர் ‘பெல்’ ராஜன் நிகழ்த்திய பின்னர் தோழர் தமிழ் காமராசன் ‘சமஸ்கிருதம், இந்தி – ஆதிக்கத்தின் கருவிகள்’ என்ற தலைப்பில் பயிலரங்க உரையை நிறைவுசெய்தார். தோழர்கள் லாரன்ஸ், செல்வின், SC/ ST ஆணையத்த துணைத் தலைவர் புனித பாண்டியன், மா.உதயகுமார், இக்லாஸ், வெற்றிச்செல்வன், மு.மாறன், சாரதாதேவி, சண்முகநாதன், நன்முகில், விஜயலட்சுமி, எழில். இளங்கோவன் உள்ளிட்டத் தோழர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# மதங்கள் மறுக்கும் மனிதம்

## புர்கா திரைப்பட விமர்சனம்

### வெற்றிச்செல்வன்

கணவனை இழந்த நஜ்மா, வீட்டில் தனியாக இருக்கிறார். 144 தடை உத்தரவு அமலில் உள்ளது. காசு வாங்கிக் கொண்டு கலவரம் செய்யும் சூர்யா, கலவரத்தில் அடிபட்டு நள்ளிரவில் நஜ்மா வீட்டுக் கதவைத் தட்டுகிறார். அவருக்கு முதலுதவி செய்து உயிரைக் காப்பாற்றுகிறார் நஜ்மா. மறுநாள் விடைபெறுகிறார் சூர்யா. ஒரு நாள் முழுவதும் நஜ்மாவிற்கும் சூர்யாவிற்கும் நடைபெறும் உரையாடல்தான் திரைப்படமாக எடுக்கப்பட்டுள்ளது.

பெண்களை அடிமைப்படுத்துவதில் மதங்களிடையே வேறுபாடு இல்லை. அனைத்து மதங்களும் பெண்களை ஆணாதிக்கக் கண்ணோட்டத்தில்தான் அணுகுகின்றன. ஆணுக்கு இல்லாமல் பெண்களுக்கு மட்டுமான சடங்குகளை மதங்கள் ஏற்படுத்துகின்றன. இவற்றைத் துணிச்சலாக எடுத்துரைத்திருப்பதாலேயே படத்தின் இயக்குநருக்குப் பாராட்டைத் தெரிவிக்கலாம்.

இஸ்லாமிய மதத்தில், கணவன் இறந்த பிறகு, மனைவி அவளது கணவன் கருவைத்தான் சுமக்கிறாளா என்பதை அறிய 'இக்தாத்' என்னும் கொடுமையான வழக்கம் பின்பற்றப்படுகிறது. நான்கு மாதங்கள் வீட்டிற்குள்ளே பெண்ணைப் பூட்டி வைக்கும் சடங்கு அது. கருப்பையைச் சுமப்பதாலேயே பெண்கள் கண்காணிப்புக்கு உள்ளாக்கப் படுகிறார்கள் என்றால் அந்தக் கருப்பையை அறுத்தெறிய வேண்டும் என்று பெரியார் சொன்னதில் தவறேது ? நான்கு மாதங்கள் வீட்டிற்குள்ளேயே அவதிப்படும் ஒரு பெண்ணின் துயரம் சிறந்த முறையில் இத்திரைப்படத்தில் காட்சிப்படுத்தப் பட்டிருக்கிறது.

"1500 வருசத்துக்கு முன்னால், அறிவும் வளரவில்லை, அறிவியலும் வளரவில்லை. அப்போது கொண்டு வந்த விதிமுறைகளை இன்னும் ஏன் பிடித்துத் தொங்கிக் கொண்டு இருக்க வேண்டும் ?" என்று ஓரிடத்தில் கேட்கப்படும் கேள்வி நம்மைச் சிந்திக்க வைக்கிறது.




"ஓர் இலக்கியம் எந்தக் காலத்தில் எழுதப்படுகிறதோ, அந்தக் காலகட்டத்தின் சூழலில் நின்றுதான் விமர்சனம் செய்ய வேண்டுமேயல்லாது, இருபது நூற்றாண்டுகளுக்குப் பின்னால் வந்து நின்று கொண்டு அதனை இன்றைய நிலையோடு ஒப்பிட்டு ஆய்வு செய்வது பொருத்தமாக இருக்காது" என்கிறார் பேராசிரியர் சுப. வீரபாண்டியன் (குறள் வானம், பக்கம் 67). அது இந்த இடத்திலும் பொருந்துகிறது. மதம் சார்ந்ததோ அல்லது தத்துவம் சார்ந்ததோ எவை என்றாலும் அவற்றை அந்தந்தக் காலத்தினோடு பொருத்திப் பார்த்து ஏற்றுக் கொள்ள வேண்டும். அது வள்ளுவராக இருந்தாலும் சரி, புத்தராக இருந்தாலும் சரி, நடைமுறைக்கு ஏற்றதாக இருக்கிறதா என்று சீர்தூக்கி அவற்றை ஏற்றுக் கொள்ள வேண்டுமே தவிர முன்னோர்கள் சொல்லி விட்டார்கள் என்று எல்லாவற்றையும் ஏற்றுக் கொள்வது மூடத்தனம். "என்றைக்கோ எழுதிய சட்டங்கள் எப்படி எல்லாக் காலத்திலும் பொருந்தும் ?" என்ற வசனம் எல்லாரையும் சிந்திக்க வைக்கும் வசனம்.

இவ்வாறு பல்வேறு சிந்தனைகளோடு, மதத்தை மறுத்து மனிதத்தைத் தூக்கிப் பிடிக்கும் இத்திரைப்படம், ஓரிடத்தில் சறுக்கி இருக்கிறது. "மதத்தில் பிரச்சினை இல்லை, மனிதர்கள்தான் பிரச்சினை; மதம் சொல்வதைப் புரியாமல் மனிதர்கள் செய்கிறார்கள்" என்ற வசனம் மதத்தைக் காப்பாற்ற முயற்சி செய்வதுபோல் அமைக்கப்பட்டுள்ளது. மற்றபடி மதத்தின் மூடப் பழக்க வழக்கங்களை, சடங்குகளை நேர்மையாக விமர்சனம் செய்வதில் இத்திரைப்படம் வெற்றி பெற்றுள்ளது.

ஏறத்தாழ நூறு ஆண்டுகளுக்கு முன்பே, இஸ்லாம் மதத்தில் உள்ள புர்கா வழக்கத்தைக் கண்டித்து, தந்தை பெரியார் பேசியுள்ளதையும் இங்கு நினைவுகூர வேண்டும்.

"துருக்கி நாட்டிலும் முகமதிய சமூகத்திலும் படுதா என்றும், கோஷா என்றும் அதாவது பெண்கள் அறைக்குள் இருக்க வேண்டியவர்கள் என்றும், முகத்தை மூடிக்கொண்டு வெளியில் போக வேண்டியவர்கள் என்றும் ஏற்படுத்தப்பட்ட கொள்கையும், புருஷன் பல பெண்களை மணக்கலாம், பெண்கள் ஏககாலத்தில் ஒரு புருஷனுக்குமேல் கட்டிக் கொண்டு வாழக்கூடாது என்ற கொள்கையும் ....வழங்கப்பட்டு வருகிறது" (குடிஅரசு, 08.01.1928) என்றவர் பெரியார்.

வழக்கம் போல, மத அடிப்படைவாதிகள் இப்படத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர் என்பதே இத்திரைப்படம் மதத்தை நோக்கிக் கேள்வி எழுப்பியுள்ளது என்பதற்குச் சான்றாகும்.

எல்லா மதங்களும் பெண்ணுரிமைக்கு எதிரானவையே. பெண்ணுரிமைக்கு எதிரான சடங்குகளைக் கேள்வி கேட்கும் இத்திரைப்படம் வரவேற்கத்தக்கதே.